1974 மார்ச் 7]

Serial No.	Name of Hospital doing Medical termination of Pregnances.	Total number of termination of pregnancies performed from April 1972 to October 1973.
(1)	(2)	(3)
23	Government Hospital, Karur	28
24	Government Hospital, Tirumangalam	1
25	Government Hospital, Palni	44
	Private Hospitals.	
26	Andhra Mahila Sabha Nursing Home, Adyar Bridge Road, Madras-28	221
27	Lady Willingdon Nursing Home, Pycrofts Gardens, Madras-6	15
28	Dr. Venugopalakrishnan Clinic and Nursing Home, Tudialur, Coimbatore-18	24
	Total ...	7,459

இணைப்பு II

[366-ம் பக்கத்தில் 321-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் 23—8—1973, 24—8—1973 தேதிகளில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள அரசினர் பின்தங்கிய வகுப்பு மாணவர் இல்லங்களுக்குச் சென்று திடீர் சோதனையிட்ட விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் 23—8—1973, 24—8—1973 தேதிகளில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள அரசு பின் தங்கிய மாணவர் இல்லங்களுக்குச் சென்று திடீர் சோதனையிட்டு, கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார் :

(i) தஞ்சாவூரில் கல்லூரி மாணவர்களுக்கென்று உள்ள அரசினர் மாணவர் இல்லத்தில் தங்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை 175 லிருந்து 223 ஆக (175 × 48) உயர்த்த வேண்டும்;

[1974 மார்ச் 7

(ii) திருச்சிராப்பள்ளி மாவட்டம், தென்னூரில் கல்லூரி மாணவர்களுக்காக அமைந்துள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர் இல்லத்தை தற்போது பின்தங்கிய வகுப்பு மாணவரில்லம்-11 அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி சந்திப்பு கிம்பர் தோட்டத்திற்கு மாற்ற வேண்டும்.

(iii) திருச்சிராப்பள்ளி மாவட்டம் தென்னூரில் உள்ள கல்லூரி மாணவர் இல்லத்திலுள்ள மாணவர்களுக்கு நல்ல ரக அரிசி உணவு வழங்கவேண்டும்.

மேற்சொன்ன கருத்துரை (1):

தஞ்சாவூர் கல்லூரி மாணவர்களுக்கென்று அமைந்துள்ள அரசினர் பின்தங்கிய வகுப்பு மாணவர் இல்ல மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவது பற்றிய தனிச் செயற்குறிப்புகள் வரப் பெற்றுள்ளன. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேற்சொன்ன கருத்துரை (ii)

தென்னூரில் கல்லூரி மாணவர்களுக்கென்று அமைந்துள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர் இல்லம் கிம்பர் தோட்டத்திற்கு மாற்றப்படுவதை அந்த மாணவர் இல்ல மாணவர்கள் விரும்ப வில்லை. எனவே, அது மாற்றப்படவில்லை.

மேற்சொன்ன கருத்துரை (iii)

திருச்சிராப்பள்ளி சிந்தாமணி சிறப்பங்காடியிலிருந்து நல்லாக அரிசி வாங்கப்படுவதன் மூலம் இக்கருத்துறை செயல்படுத்தப் பட்டு வருகிறது.

Statement showing the details of the surprise inspection made by the Honourable Minister for Backward Classes, of Government Backward Classes Hostels at Thanjavur and Tiruchirappalli on 23rd August 1973 and 24th August 1973.

Honourable Minister for Backward Classes made surprise inspection of the Government Backward Classes Hostels in Thanjavur and Tiruchirappalli districts on 23rd August and 24th August 1973 and he made the following suggestions :—

(i) To increase the strength of boarders from 175 to 223 (175 + 43) in the Government Hostel for College Boys, Thanjavur,

1974 மார்ச் 7]

(ii) To shift the Backward Classes Hostel for College Boys, Thennur in Tiruchirappalli district to Kimber Garden in Tiruchirappalli Junction where the Backward Classes Boys' Hostel No. II is now located; and

(iii) To supply good quality rice to the inmates of the Hostel for College Boys, Thennur, Tiruchirappalli district.

Suggestion (i) above :

Separate proposals have been received for the increase of the strength of boarders in the Government Backward Classes Hostel for College Boys, Thanjavur. The proposal is under consideration of the Government.

Suggestion (ii) above :

As the inmates of the Backward Classes Hostel for College Boys at Thennur are not willing to have the hostel shifted to Kimber Gardens, the hostel has not been shifted.

Suggestion (iii) above :

This suggestion is being implemented now by purchasing good quality of rice from the Chinthamani Super Market, Tiruchirappalli.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[391-ம் பக்கத்தில் 327-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) & (இ) காய்கறி விற்பனைக்காக முறைப்படுத்தப்பட்ட அங்காடி ஒன்று தொடங்குவதற்கெனத் திட்டவட்டமான செயற் குறிப்புகள் எவையும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மாநில வேளாண்மை விற்பனைக் கழகம், தமிழ்நாட்டிலுள்ள முறைப்படுத்தப்பட்ட அங்காடிகள் துறை பற்றிய திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த அறிக்கையில் காய், கனி விற்பனைக்காகவும் முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளை உருவாக்குவது பற்றி கருதப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை கடன் வடிவில் நிதியுதவி பெறுவதற்கு உலக வங்கிக்கு அனுப்பப் படுவதற்காக, இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது,